




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்









Vol: 02 | Issue: 356 | 4 Pages | 22.7.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 356 | 4 பக்கங்கள் | 22.7.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

**யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்**

**குயர்ந்த உலகம் புகும்**

**விளக்கம்:** உடம்பையான் எனக்கருதலும் தொடர்பு இல்லாத பொருளை எனது எனக்கருதலுமாகிய மயக்கத்தை போக்குகின்றவன், தேவர்க்கும் எட்டாத உயர்ந்த நிலை அடைவான்.

# மருத்துவமனையில் மு.க.ஸ்டாலின் அனுமதி: கோவை, திருப்பூர் பயணம் ஒத்திவைப்பு

திருப்பூர், ஜூலை 22

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை, நாளை மறுநாள் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டு இருந்தார். இரு மாவட்டங்களிலும் கள ஆய்வு மேற்கொள்வதுடன் கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கவும் அவர் திட்டமிட்டு இருந்தார்.

நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டு வந்த நிலையில், இன்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் இருந்து தனது கொளத்தூர் தொகுதியில் நடைபெறும் கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க காரில் புறப்பட்டு சென்றபோது உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் ஆயிரம்விளக்கு பகுதியில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவ பரிசோதனை மேற்கொண்ட டாக்டர்கள், 2 நாட்கள் ஓய்வில் இருக்கும்படி அறிவுறுத்தியதுடன் தொடர்ந்து மருத்துவமனையிலேயே தங்கி சிகிச்சை பெறுமாறு கூறினர்.

இதனால், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அப்பல்லோ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த நிலையில், முதல்அமைச்சரின் கோவை, திருப்பூர் பயணங்கள் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சரும், திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளருமான மு.பெ.சாமிநாதன் வெளியிட்டுள்ள அறிவிப்பில், முதல்அமைச்சரின் திருப்பூர் மாவட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 89 சதவீத கிராமப்புற வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு




புதுடெல்லி, ஜூலை 22

கிராமப்புறங்களில் இருக்கும் அனைத்து வீடுகளுக்கும் இல்லந்தோறும் சுகாதாரமான மற்றும் சுகாதாரமான குடிநீர் வழங்கும் ஜல் ஜீவன் திட்டத்தை மத்திய அரசு கடந்த 2019ம் ஆண்டு தொடங்கியது. இதன்படி பிரத்யேக குழாய் இணைப்பு மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

புதுச்சேரி, தெலுங்கானா, குஜராத், பஞ்சாப் உள்பட 11 மாநிலங்கள் ஜல் ஜீவன் திட்டத்தில் 100 சதவீத இலக்கை எட்டிவிட்டன. தமிழகத்தில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 1 கோடியே 25 லட்சத்து 26 ஆயிரத்து 665 வீடுகளுக்கு குடிநீருக்கான குழாய் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது.

இதில், நேற்று வரையிலான நிலவரப்படி 1 கோடியே 11 லட்சத்து 61 ஆயிரத்து 65 வீடுகளுக்கு குடிநீருக்கான இணைப்பு கொடுக்கப்பட்டு உள்ளது. இது 89.10 சதவீதம் ஆகும். ஒட்டுமொத்தமாக இந்தியாவில் 19 கோடியே 36 லட்சத்து 45 ஆயிரத்து 942 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதில் 15 கோடியே 67 லட்சத்து 32 ஆயிரத்து 86 வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. இது 80.94 சதவீதம் ஆகும்.

# கூடலூரில் ஆதரவற்றோருக்கு இலவச பொருட்கள் மறுப்பு: மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?



தேனி மாவட்டம், கூடலூர் நகராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு நியாய விலைக் கடைகளில் ஆதரவற்ற முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பார்வையற்ற மூத்த குடிமக்களின் குடும்ப அட்டைகளுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த இலவச அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள முதியோர்கள் நியாய விலைக் கடைகளுக்குச் சென்று தங்களுக்குரிய பொருட்களைக் கேட்கும்போது, கடைக்காரர்கள் மறுப்பு தெரிவித்து அவர்களைஅலைக்கழிப்பதாகப் பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். மனிதாபிமானமற்ற இச்செயல் குறித்து மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் அதிகாரி உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே ஒட்டுமொத்தப் பொதுமக்களின் எதிர்பார்ப்பாகும். இந்த அவல நிலைக்கு மாவட்ட நிர்வாகம் எப்போது முற்றுப்புள்ளி வைக்கும் என ஏழை எளியோர் கண்ணீர் மல்க காத்திருக்கின்றனர் .

# அமர்நாத் யாத்திரை: 2 லட்சம் பேர் தரிசனம்



ஸ்ரீநகர், ஜூலை 22

ஜம்மு காஷ்மீரில் இமயமலையில் உள்ள அமர்நாத் குகைப்பகுதியில் இந்து மதக்கடவுள் சிவன் கோவில் உள்ளது. பனிசூழ்ந்த மலையில் இயற்கையாக உருவாகும் பனி லிங்கத்தை தரிசிக்க ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் யாத்திரையாக சென்று வருகின்றனர். இந்த ஆண்டுக்கான அமர்நாத் யாத்திரை கடந்த 3ம் தேதி தொடங்கியது. யாத்திரை தொடங்கிய நாள் முதல் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், நடப்பு ஆண்டு அமர்நாத் யாத்திரை தொடங்கியது முதல் தற்போதுவரை 2 லட்சத்திற்கும் மேற்பட பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசனம் செய்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. குறிப்பாக, நேற்று ஒரேநாளில் 4 ஆயிரத்து 388 பேர் அமர்நாத் யாத்திரை சென்று பனி லிங்கத்தை தரிசனம் செய்துள்ளனர்.

அதேவேளை, நடப்பு ஆண்டு அமர்நாத் யாத்திரை அடுத்த மாதம் 9ம் தேதி வரை நடைபெற உள்ள நிலையில் பனி லிங்கத்தை தரிசிக்க இன்னும் அதிக அளவில் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு அமர்நாத் யாத்திரையில் 5.10 லட்சம் பக்தர்கள் பனி லிங்கத்தை தரிசனம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# செங்குன்றத்தில் FosTac பயிற்சி பட்டறை சிறப்பாக நடைபெற்றது - 50 பேர் பயிற்சி



செங்குன்றத்தில் FosTac பயிற்சி பட்டறை சிறப்பாக நடைபெற்றது – 50 பேர் பயிற்சி பெற்றனர்.

நமது செங்குன்றம் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வணிகர்கள் சங்கத்தில் ★ பரிக் ஷன் லெபாரட்ரி யின் தொழில்நுட்பஇயக்குனர் திரு. பிரவீன் ஆண்டுர்ஸ் அவர்களால்FosTacபயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் புழல் பகுதியின் உணவு பாதுகாப்பு அதிகாரி திரு.G.வெங்கடேசன் அவர்கள், சம்மேளனத்தின் தலைவர் திரு.D. துளசிங்கம் அவர்கள், சம்மேளனத்தின் செயலாளர் திரு.Dr.A.C.மோகன் அவர்கள் மற்றும்நமதுசங்கத்தின்தலைவர்திரு.D.கோபி அவர்களும்★ பொருளாளர் திரு.K.N. குணசேகரன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் 50 நபர்கள் பங்கேற்று பயிற்சி பெற்றனர்.




தமிழ்நாடு அமெச்சூர் ஆணழகன் சங்கத்தின் 2025 Mr செந்தில் கிளாசிக் சென்னையில் 20 .07 .2025 அன்று நடைபெற்றது. இதில் தமிழ்நாடு காவல்துறை சார்பாக ஆயுத படை தலைமை காவலர் திரு செல்வகுமார் கலந்து கொண்டு 65 70 கிலோ பிரிவில் தங்க பதக்கமும் மற்றும் ஒட்டுமொத்த கோப்பை வென்று Mr சென்னை சாம்பியன்களின் சாம்பியன் பட்டத்தை வென்றார். இதற்கு உறுதுணையாக இருந்த சென்னை ஆணையர் திரு அருண் IPS அவர்களுக்கும் காவல் துறை அணி பயிற்சியாளர் திரு புருஷோத்தமன் மிஸ்டர் ஆசியா அவர்களுக்கும் மிஸ்டர் வேர்ல்ட் திரு ஜெயபிரகாஷ் அவர்களுக்கும் மற்றும் ஆயுத படை துணை ஆணையர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து கோப்பையை வென்றார்.



கோவை மாநகராட்சி 35 வது உட்பட்ட புதிய நெசவாளர் காலனி சாலையிலிருந்து மெயின் ரோடு வரை உள்ள மழைநீர் வடிகால் மிகவும் மோசமாக இருந்தது அப்பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று புதிய மழைநீர் வடிகால் திரும்ப கட்ட பூமி பூஜை போடப்பட்டது என்றும் மக்கள் பணியில் சம்பத் 35வது வட்ட மாமன்ற உறுப்பினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஐதராபாத் புறப்பட்ட இண்டிகோ விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு; அவசர அவசரமாக தரையிறக்கம்




ஐதராபாத், ஜூலை 22

ஆந்திர மாநிலம் திருப்பதியில் இருந்து ஐதராபாத்திற்கு நேற்று இரவு 7.55 மணியளவில் இண்டிகோ விமானம் புறப்பட்டது. விமானத்தில் 50க்கும் மேற்பட்டோர் பயணித்தனர்.

விமானம் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது அதில் தொழில்நுட்ப கோளாறு ஏற்படதை கண்டுபிடித்தார். இதையடுத்து, விமானத்தை விமானி மீண்டும் திருப்பதியில் அவசர அவசரமாக தரையிறக்கினார். திருப்பதி விமான நிலையத்தில் தரையிறக்குவதற்குமுன் சுமார் 30 நிமிடங்களில் விமானம் நடுவானில் வட்டமடித்துள்ளது.

விமானம் தரையிறக்கப்பட்டு அதில் இருந்த பயணிகள் அனைவரும் விமானநிலையத்திற்குஅழைத்து செல்லப்பட்டனர். இந்தசம்பவத்தில் யாருக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

# திருச்சிராப்பள்ளி மாநகரில் திருச்சி நாடார் உறவின் முறை சங்கம் சார்பில் பெருந் தலைவர் காமராஜர் 123வது பிறந்த நாள் விழா மற்று ரத்த தானம்




திருச்சிராப்பள்ளி மா நகரில் திருச்சி நாடார் உறவின் முறை சங்கம் சார்பில் பெருந் தலைவர் காமராஜர் 123வது பிறந்த நாள் விழா, இரத்த தானம் வழங்கும் விழா மற்றும் குடும்ப ஆண்டு விழா திருச்சி நாடார் உறவின் முறை எல்.ஆர்.ஆர். திரு மண மண்டபத்தில் நாடார் சங்க பொதுச் செயலாளர் சிசண்முக துரை நாடார் தலைமையில் கௌரவ தலைவர் எஸ்.ஜே.மணி, கௌரவ தலைவர் ராக் போர்ட் ராதாகிருஷ்ணன், தலைவர் எம் இளவேந் தன் நாடார், வழக்கறிஞர் என்.சிவா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. பொருளாளர் பழக்கடை.சரவணன் நாடார் வர வேற்புப் பேசினார். கன்னியாகுமரி சாமித் தோப்பு அய்யா வைகுண்டர் வழி தலைமை மகா குரு பால பிரஜாபதி டிகளார் தொடங்கி வைத்து பேசினார். முன்னதாக தமிழ் நாடு நகர் புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந் து ரத்த தானம் வழங்கும் முகாமை தொடங்கி வைத்தார். பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற பள்ளி மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கினார். காமராஜர் பிறந்த நாள் விழா முன்னிட்டு பெரிய கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. காமராஜர் அவர்களின் சிறப்புகள் பற்றி அமைச்சர் கே.என்.நேரு பேசினார். கல்வியாளர் டாக்டர் யெல்லானி கல்வி கண் திறந்த காமராஜர் என்ற தலைப்பில் பேசினார். இந்த நிகழ்ச்சியில் திருச்சி மாநகர மேயர் மு.அன்பழகன், திருச்சி பகுதி செயலாளர் பி. மோகன் தாஸ் , கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பணி நிறைவு ஆர்.பால்வண்ணன், பேராசிரியர் மணி பிரகஸ்பதி, கே.டி. எம் . மளிகை ஜெயக்குமார் நாடார், வழக்கறிஞர் ராஜேந்திர குமார் நாடார், போஸ் செல்வக் குமார் நாடார், சிந்தாமணி ரவி நாடார், ஆறுமுகம் நாடார், ஜெயராஜ் நாடார், அருண் அய்யனார் நாடார், பட்டு முருகேசன், அரிசி கடை கண்ணன், பன்னீர்செல்வம் நாடார், ஜெயமோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்




தினகனி



# சென்னை மாநகராட்சி வாகன நிறுத்துமிடங்களில் கட்டணம் இல்லை



சென்னை, ஜூலை 22

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாகன நிறுத்தக் கட்டண வசூல் பணியானது தமிழ்நாடு முன்னாள்படைவீரர்கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், தற்போது மேற்கண்ட நிறுவனத்துடனான ஒப்பந்தம் நேற்றுடன் (20.07.2025) முடிவடைந்தது.

இதனையொட்டி பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வாகன நிறுத்தத்திற்கான ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் சார்பில் மறு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் வரை பொதுமக்கள் தங்கள் வாகனங்களை, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள வாகன நிறுத்துமிடங்களில் எவ்விதக் கட்டணமுமின்றி நிறுத்திக் கொள்ளலாம்.

இது தொடர்பான புகார்களுக்கு, பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913 என்ற தொலைபேசி எண்ணில் பொதுமக்கள் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சேலத்தில் தவெக கொள்கை விளக்க முதல் பொதுக்கூட்டம்



சென்னை, ஜூலை 22

தமிழக வெற்றிக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:

தமிழ்நாட்டு மக்களின் எதிர்கால நலனை நோக்கிய தமிழக வெற்றிக்கழக பயணத்தின் அடுத்தகட்டமாக, மக்கள் விரும்பும் முதல்அமைச்சர் வேட்பாளர் விஜய் உத்தரவின்பேரில், நம் கட்சியின் குறிக்கோள்களையும், கொள்கைகளையும் தமிழக மக்களிடையே கொண்டு சேர்க்கும்நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு உள்ளன.

தவெக குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகையில் 5 மண்டலங்கள், தவெக நிர்வாக ரீதியாக பிரிக்கப்பட்ட 120 மாவட்டங்கள்மற்றும், 12,500 கிளைகளில் தவெக கொள்கை விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்று செயற்குழு கூட்டத்தில்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்தின்படி, மாநில அளவிலான கொள்கை விளக்க முதல் பொதுக்கூட்டம் நாளை (இன்று) மாலை 4 மணிக்கு சேலம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மைதானத்தில் நடக்க உள்ளது. இந்த பொதுக்கூட்டத்திற்கு கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் தலைமை தாங்குகிறார். இந்த பொதுக்கூட்டத்தில் கட்சியின் அனைத்து நிலை நிர்வாகிகளும் பங்கேற்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

த.வெ.க. சார்பில் சேலத்தில் நடைபெறும்கொள்கைவிளக்க முதல் பொதுக்கூட்டத்தில் விஜய் பங்கேற்பாரா? என்ற கேள்வி அரசியல் களத்தில் முன்வைக்கப்பட்டு உள்ளது. சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கடைசி நேரத்தில் விஜய் பங்கேற்று தொண்டர்களுக்கு இன்ப அதிர்ச்சியை கொடுத்தார். அதே போல், சேலத்தில் நடக்கும் பொதுக்கூட்டத்திலும் விஜய் பங்கேற்கலாம் என்ற தகவலும் வெளியாகி இருக்கிறது.

# வீட்டு வாசலில் கிடந்த மனித மண்டை ஓடு, எலும்புகள் பில்லி சூனியம் வைத்ததாக பீதி



சென்னை, ஜூலை 22

சென்னை வடபழனி சோமசுந்தர பாரதியார் நகர், 4வது தெருவை சேர்ந்தவர் கருணாகரன் (வயது 51). கால்நடைகளுக்கான மருந்துகள் விற்பனை செய்யும் கடையில் ஊழியராக வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் இவர் நேற்று காலை வீட்டில் இருந்து எழுந்து வெளியே வந்து பார்த்த போது, வீட்டின் வாசலில் மனித மண்டை ஓடு மற்றும் எலும்புகள் கிடந்ததை கண்டதும் அதிர்ச்சி அடைந்து அலறி கூச்சலிட்டார்.

அவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம், பக்கத்தில் வசித்து வந்த பொதுமக்களும், சிறுவர்களும் வெளியே ஓடி வந்து பார்த்தனர். அப்போது பில்லி சூனியம் வைத்தது போல் கிடந்த மண்டை ஓடு மற்றும் எலும்பு துண்டுகளை கண்டு பீதியில் அலறி அடித்து ஓட்டம் பிடித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக கருணாகரன் வடபழனி போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில், வடபழனி போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

கருணாகரன் வசிக்கும் வீட்டின் அருகே சிறிது தொலைவில் சுடுகாடு உள்ளதும், அங்கிருந்து மண்டை ஓடு மற்றும் எலும்புகளை எடுத்து வந்து மர்மநபர்கள் யாரோ கருணாகரன் வீட்டு வாசல் முன்பு வைத்து விட்டு சென்று இருப்பதும் முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்தது.

முன்விரோதத்தில் கருணாகரனை அச்சுறுத்தி பீதியடைய செய்வதற்காக மனித மண்டை ஓடு எலும்புகள் வைத்து பில்லி சூனியம் செய்து விட்டு யாரேனும் வீசிச்சென்றார்களா? என்ற கோணத்திலும் போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

# 100 சொகுசு கார்களை விற்று ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்த திருடன் கைது



சென்னை, ஜூலை 22

சென்னை அண்ணாநகர் கதிரவன் காலனியை சேர்ந்தவர் எத்திராஜ் ரத்தினம் (வயது 53). இவர் கடந்த மாதம் 10ந் தேதி தனது விலை உயர்ந்த சொகுசு காரை தனது வீட்டின் வாசலில் நிறுத்தி வைத்திருந்தார். அப்போது அதிகாலையில் அங்கு வந்த மர்ம நபர் ஒருவர், நவீன கருவிகளை வைத்து சொகுசு காரை லாவகமாக திருடிச்சென்றுள்ளார்.

கார் திருடப்பட்டதை அறிந்து அதிர்ச்சி அடைந்த எத்திராஜ், அங்கு வைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராகாட்சிகளைஅடிப்படை ஆதாரமாக வைத்து சென்னை திருமங்கலம் போலீசில் புகார் கொடுத்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து கார் திருடனை தேடி வந்தனர். இது தொடர்பான கண்காணிப்பு கேமரா காட்சிகளின் அடிப்படையில் திருமங்கலம் போலீசார் கார் திருடனை நோட்டமிட்டு வந்தனர்.

இந்த நிலையில் கார் கொள்ளையன் புதுச்சேரியில் பதுங்கி இருப்பதாக வந்த தகவலையடுத்து, போலீசார் அங்கு விரைந்தனர். இதையடுத்து அங்கு பதுங்கி இருந்த கார் திருடனை மடக்கிப்பிடித்த போலீசார் சென்னை அழைத்து வந்து விசாரித்தனர்.

விசாரணையில், அவர் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரைச் சேர்ந்த சட்டேந்திரசிங் ஷெகாவத் (43) என்பதும், எம்.பி.ஏ. பட்டதாரியான இவருடைய தந்தை ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்பதும் தெரியவந்தது. மேலும் இவர் ராஜஸ்தானில் இருந்து வந்து தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் தங்கி இருந்து சொகுசுகார்களைநோட்டமிடுவதும், பின்னர் அதை நவீன கருவிகள் மூலம் லாவகமாக திருடி வந்ததும் தெரியவந்தது.

பின்னர் அதை சாலை மார்க்கமாகவே ஓட்டிச் சென்று ராஜஸ்தான், நேபாளம் பகுதிகளில் விற்று சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்ததும் தெரியவந்தது. இவர் இது போன்று 20 ஆண்டுகளாக 100க்கும் மேற்பட்ட சொகுசு கார்களை திருடி பணம் சம்பாதித்து ஆடம்பரவாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார். இதையடுத்து போலீசார் தொடர் கார்கள் திருட்டு வழக்கில் சட்டேந்திரசிங் ஷெகாவத்தை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

முன்னதாக வடமாநில கார் திருடன் பிடிபட்ட தகவல் தெரிந்ததும் காரை பறிகொடுத்த 10க்கும் மேற்பட்டவர்கள் சென்னை திருமங்கலம் போலீஸ் நிலையத்தில் குவிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

# கிருஷ்ணகிரி: அடுத்தடுத்து மோதிக்கொண்ட 10 வாகனங்கள் 4 பேர் பலி



சேலம், ஜூலை 22

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் சிக்காரி மேடு என்னும் இடத்தில் சரக்கு வாகனங்கள், அரசு பேருந்து, கார்கள் என 10 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்ட விபத்தில் 4 பேர் பலியாகினர்.

பலர் காயம் அடைந்துள்ளனர்.தகவல் அறிந்த கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை நிகழ்விடத்திற்கு விரைந்துள்ளனர். .சூளகிரி காவல் துறையினர், விபத்தில் சிக்கிய வாகனங்களை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ஒகேனக்கலுக்கு நீர்வரத்து அதிகரிப்பு: அருவியில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் தடை



தருமபுரி, ஜூலை 22

கர்நாடக, கேரள மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கே.ஆர்.எஸ்., கபினி ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

பாதுகாப்பு கருதி இந்த இரு அணைகளிலும் இருந்து அதிகளவு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் காரணமாக தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து விநாடிக்கு 32,000 கன அடியிலிருந்து 43,000 கன அடியாக அதிகரித்துள்ளது.

இந்தநிலையில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் ஒகேனக்கல் நீர் வீழ்ச்சிகளில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் தடை விதித்து மாவட்ட கலெக்டர் சதீஷ் உத்தரவிட்டுள்ளார். மக்கள் பாதுகாப்பாகஇருக்கநீர்வளத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

# பாஜக யாரையும் ஏமாற்றுகிற கட்சி கிடையாது.. ஏமாறக்கூடிய கட்சியும் கிடையாது அண்ணாமலை



சென்னை, ஜூலை 22

சென்னைவிமானநிலையத்திற்கு கோவையில் இருந்து வந்த பா.ஜனதா முன்னாள் தலைவர் அண்ணாமலை நிருபர்களிடம் கூறியதாவது: பா.ஜனதா யாரையும் ஏமாற்றுகிற கட்சி இல்லை, அதே நேரத்தில் ஏமாறக்கூடிய கட்சியும் இல்லை. எங்கள் கட்சிக்கென்றுஒருதன்மை உண்டு, யாரையும் அடிச்சு பிடுங்க மாட்டோம். எந்த கட்சியையும் கீழே தள்ளி நாங்கள் வளர வேண்டும் என நினைப்பதில்லை. அதே நேரத்தில் நாங்களும் வளர வேண்டும் என நினைப்போம். இந்தக் கூட்டணி அமைத்ததில் என்னுடைய பங்கு இல்லை. ஆனால் என்னுடைய நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறேன். தி.மு.க.வை அகற்ற வேண்டும் என்ற ஒற்றை நோக்கில் பயணித்து வருகிறோம்.

கூட்டணிக்கு எதிராக நான் எங்கும் பேசவில்லை, 3 மாதமாக அமைதியாக இருக்கிறேன். கோவையில் தொடங்கிய எடப்பாடி சுற்றுப்பயணத்தில்பா.ஜனதா மாநில தலைவரும், மத்திய இணை அமைச்சரும் கலந்து கொண்டனர். நான் தொண்டன் எதற்காக அதில் கலந்து கொள்ள வேண்டும். எனக்கென மரியாதை இருக்கிறது. அழையா விருந்தாளியாக தேவையில்லாதஇடத்திற்கு செல்ல மாட்டேன். பதவி பின்னாடி நான் போனதில்லை. மாநிலத் தலைவர் பதவியே நான் வெங்காய பதவி என்று தான் சொல்லியுள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

# தொடர் மழை.. நெல்லை மாவட்ட அணைகளின் நீர்மட்டம் கிடுகிடு உயர்வு



நெல்லை, ஜூலை 22

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் தென்மேற்கு பருவமழை தொடங்கி பெய்து வருகிறது. நெல்லைமாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை பரவலாக சாரல் மழை பெய்தது.

நெல்லை மாநகர பகுதியில் மழை விட்டு விட்டு பெய்து கொண்டே இருந்தது. இதனால் வெளியே சென்ற பொதுமக்கள் குடை பிடித்தவாறு சென்றனர். மழையால் ஆங்காங்கே மழை நீர் தேங்கின.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நேற்று முன்தினம் கனமழை பெய்ததால் நெல்லை, தென்காசி மாவட்டங்களில் உள்ள அணைகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. 143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் 115.35 அடியாக இருந்தது.

நேற்று ஒரு நாளில் 1 அடி உயர்ந்து 116.15 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 3 ஆயிரத்து 76 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து கார் பருவ சாகுபடி மற்றும் குடிநீருக்காக 1750 கன அடி நீர் திறந்து விடப்பட்டது.

சேர்வலாறு அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் 110.40 அடியாக இருந்த நிலையில் நேற்று ஒரே நாளில் 8 அடி உயர்ந்து 118.44 அடியாக உள்ளது. மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 95 அடியாக உள்ளது. அணைக்கு 185 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 175 கன அடி நீர் திறந்து விடப்பட்டது.

பாபநாசம் பகுதியில் 5 மில்லி மீட்டரும், சேர்வலாறு 4 மில்லி மீட்டரும் மணிமுத்தாறு 9 மில்லி மீட்டரும், கன்னடியன் 17 மில்லி மீட்டரும், அம்பையில் 13 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

இதே போல் மாஞ்சோலையில் 16 மில்லி மீட்டரும், காக்காச்சியில் 24 மில்லி மீட்டரும், நாலுமுக்கு பகுதியில் 33 மில்லி மீட்டரும், ஊத்து பகுதியில் 29 மில்லி மீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் அகஸ்தியர் அருவியில் 10 நாட்கள் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. பாசனத்திற்காக பாபநாசம், மணிமுத்தாறு, ராமநதி, கடனாநதி, அடவிநயினார், கருப்பாநதி உள்ளிட்ட அணைகளில் தண்ணீர் திறக்கப்பட்டது.

இதையொட்டி நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் கார் பருவத்திற்கான விவசாய பணிகள் மும்மரமாக நடந்து வருகிறது.

தென்காசி மாவட்டம் கடனாநதி பகுதியில் 17 மில்லி மீட்டர், ராமநதி பகுதியில் 12 மில்லி மீட்டர், குண்டாறு பகுதியில் 10 மில்லி மீட்டர், அடவிநயினார் பகுதியில் 16 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

கடனாநதி அணை நீர்மட்டம் நேற்று ஒரே நாளில் 4 அடி உயர்ந்து 63.10 அடியாக உள்ளது. ராமநதி அணையின் நீர்மட்டம் 3½ அடி உயர்ந்து 62½ அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 127 அடியாகவும் உள்ளது.

# வீட்டில் தனியாக இருந்த மூதாட்டி நகைக்காக கொலை



நாகை, ஜூலை 20

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி அருகே உள்ள திருப்பூண்டிசை சேர்ந்தவர் அகமது நாச்சியார் (வயது 66). மாடி வீட்டில் தனியாக வசித்து வந்த இவர் வீட்டில் தூங்கி க் கொண்டு இருந்தார்.

நள்ளிரவில் அகமது நாச்சியார் வசித்து வந்த வீட்டின் காம்பவுண்டில் இருந்த இரும்பு கேட்டை கழற்றி வைத்து விட்டு மர்ம நபர்கள் வீட்டின் உள்ளே சென்று உள்ளனர்.

பின்னர் மாடிக்கு சென்று அங்கு தூங்கிக்கொண்டு இருந்த மூதாட்டியின் கழுத்தை நெரித்து கொன்று விட்டு அவர் கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் நகையை திருடி சென்றுள்ளனர்.

இது குறித்து தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினர். பின்னர் மூதாட்டியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

மேலும் கொலை நடந்த வீட்டுக்கு கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் அந்த வீட்டில் பதிவாகி இருந்த கைரேகைகளை சேகரித்தனர்.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடிய மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

# கோவை: தண்டவாள புதுப்பிப்பு பணியால் ரெயில் சேவையில் மாற்றம்



சேலம், ஜூலை 22

சேலம் தெற்கு ரெயில்வே அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: கோவை மாவட்டம் போத்தனூர் ரெயில்வே பாதையில் தண்டவாளம் புதுப்பிப்பு பணிகள் நாளை (செவ்வாய்க்கிழமை) நடைபெற உள்ளது. இதனால் 4 ரெயில்களின் சேவை நேரம் தற்காலிகமாக மாற்றம் செய்யப்படுகிறது.

கண்ணூர்கோவை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்16607) காலை 6 மணிக்கு கண்ணூரில் இருந்து புறப்பட்டு பாலக்காடு வரை மட்டுமே இயக்கப்படும். இந்த ரெயில் பாலக்காட்டில் இருந்து கோவை வரை தற்காலிகமாக ரத்து செய்யப்படுகிறது. இதே போல் மதுரைகோவை செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 16722) காலை 7.05க்கு மதுரையில் இருந்து புறப்பட்டு பொள்ளாச்சி வரை மட்டுமே இயக்கப்படுகிறது.அந்தரெயில் சேவை பொள்ளாச்சி முதல் கோவை வரை தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது.

இதேபோல், கோவை கண்ணூர் செல்லும் எக்ஸ்பிரஸ்ரெயில் (வண்டி எண் 16608) மதியம் 1.50க்கு கோவையில்இருந்து புறப்பட இருந்த நிலையில் 3.10 மணிக்கு பாலக்காட்டில் இருந்து புறப்படும். கோவையில் இருந்து பாலக்காடு வரை இந்த ரெயில் சேவை நிறுத்தப்படுகிறது. கோவை மதுரை எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண் 16721) மதியம் 2.30 மணிக்கு கோவையில் இருந்து புறப்படவிருந்த நிலையில், 3.30க்குபொள்ளாச்சியில் இருந்து புறப்படும். கோவை முதல் பொள்ளாச்சி வரை இந்த ரெயில் இயக்கப்படாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆட்டோ தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தை அமல்படுத்த வேண்டும்: நெல்லை மாநாட்டில் தீர்மானம்




திருநெல்வேலி ஜூலை 22

நெல்லை மாவட்டம், பாபநாசத்தில் சிஐடியு நெல்லை மாவட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தின் 10வது மாவட்ட மாநாடு நடைபெற்றது. முன்னதாக கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. மூத்த தலைவர் முத்துகிருஷ்ணன் கொடியேற்றினார். மாநாட்டிற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் நடராஜன் தலைமை வகித்தார். ஆட்டோ சங்கம் மாவட்டத் துணைச் செயலாளர் ஜெயராஜ் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். வரவேற்பு குழு செயலாளர் இசக்கிராஜன் வரவேற்று பேசினார். சிஐடியு அகில இந்திய செயலாளர் கருமலையான் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார். சங்கத்தின் மாவட்ட பொதுச் செயலாளர் முருகன் வேலை அறிக்கைகளை சமர்ப்பித்து பேசினார். மாவட்ட பொருளாளர் வலதிபெருமாள் வரவுசெலவு அறிக்கைகளை சமர்ப்பித்து பேசினார்.

சிஐடியு மாநில குழு உறுப்பினர் மோகன், வரவேற்பு குழுதலைவர் ஆறுமுகம், சிஐடியு மாவட்டத் தலைவர் பீர்முகமதுஷா, வழக்கறிஞர் சட்ட ஆலோசகர் ராஜசேகரன், ரவீந்திரன் EPF, சிஐடியு மாவட்ட பொருளாளர் ராஜன், சி.பி.எம். பாப்பாகுடி ஒன்றிய செயலாளர் மாரிச்செல்வம், நெல்லை மாவட்ட சாலை போக்குவரத்து தொழிலாளர் சங்க மாவட்ட பொதுச்செயலாளர் மரியஜான்ரோஸ் ஆகியோர்மாநாட்டில்வாழ்த்தி பேசினர். மாநாட்டில் ஆட்டோ சங்க புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்படி சங்கத்தின்நெல்லைமாவட்ட தலைவராக நடராஜன், மாவட்ட பொதுச் செயலாளராக முருகன், மாவட்ட பொருளாளராக வலதிபெருமாள், துணைப் பொதுச் செயலாளராக ஜெயராஜ் மற்றும் 11 துணைத் தலைவர்கள், 11 இணைச் செயலாளர்கள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டில் ஆட்டோ தொழிலை பாதுகாக்க அகஸ்தியர் கோவில் மற்றும் சொரிமுத்து அய்யனார் கோவிலுக்கு சென்று வர ஆட்டோக்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். புதிய மோட்டார் வாகன சட்டத்தை ரத்து செய்ய வேண்டும். பெட்ரோல், டீசல் கேஸ் விலையை ஜி.எஸ்.டி. வரம்புக்குள் கொண்டு வர வேண்டும். ஆட்டோ தொழிலாளர்களுக்கு நலவாரியத்தின் மூலம் 4 லட்சத்திற்கான வீடு கட்டும் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். ஆட்டோக்களுக்கு விதிக்கப்படும் ஆன்லைன் அபராதத்தை கைவிட வேண்டும். ஆட்டோ தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தை அமல்படுத்த வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சிஐடியு தமிழ்நாடு ஆட்டோ சம்மேளன மாநில பொதுச் செயலாளர் சிவாஜி மாநாட்டை நிறைவு செய்து பேசினார். வரவேற்பு குழு பொருளாளர் பஷீர்பாபா நன்றி கூறினார்.

# பணிமேம்பாடு ஊதியம் வழங்க வலியுறுத்தி 28ம்தேதி ஆர்ப்பாட்டம்: கல்லூரி ஆசிரியர் சங்கங்கள் அறிவிப்பு

சென்னை ஜூலை 22

கல்லூரி ஆசிரியர்களுக்கான சங்கங்கள் சார்பில் மூட்டா பொதுச் செயலாளர்செந்தாமரைகண்ணன், ஏயூடி பொதுச் செயலாளர் சேவியர் செல்வகுமார் ஆகியோர்கூட்டாகவெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

கடந்த 2001ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர் பணியிட நியமனங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படாததால், தகுதி பெற்ற பலருக்கும் நிரந்தரப் பணியாற்றும் வாய்ப்பு கிடைக்கப் பெறவில்லை. பின்னர் 2007ம் ஆண்டு தான் உயர்கல்வியில் பணிநியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வருடமும் அதன் பின்னரும் பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு தரநிலை ஊதியம் ஒவ்வொரு படிநிலைகளிலும் பணிமேம்பாடு உரிய காலத்தில் வழங்கப்படவில்லை. ரூ.6,000 முதல் 7,000 தர ஊதியம் போராடியே பெறப்பட்டது. ரூ.7,000 முதல் 8000 மற்றும் ரூ.8,000 முதல் 9,000 தர ஊதியம் வழங்கப்படவில்லை.

பல்கலைக்கழக மானியக்குழு (UGC) மற்றும் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான பணி மேம்மாட்டிற்கான (நிலை10ல் இருந்து நிலை 11, நிலை 11ல் இருந்து நிலை 12 மற்றும் நிலை 12ல் இருந்து நிலை 13(A)) அரசாணையானது (G.O.Ms. No.5.Higher Education Department) தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறையால் 11.1.2021 அன்று வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அந்த அரசாணையைச் செயல்படுத்துவதற்கு உரிய செயல்முறைகளும் (4.5.2021) கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களால் வெளியிடப்பட்டது.

அதன்படி, அரசுக்கல்லூரிகளில் பணியாற்றிடும் ஆசிரியர்களுக்கு பணிமேம்பாடு தொடர்ந்து வழங்கப்படுவதுடன், அதற்குரிய ஊதியமும் நிலுவைத்தொகையோடு உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஊதியமோ நிலுவைத்தொகையோ வழங்கப்படுவதில்லை. அரசாணையின்படி பணிமேம்பாடு வழங்கிடக் கோரிய சங்கங்களின் தொடர் முறையீடுகளின் விளைவாக, தமிழ்நாட்டில் உள்ள அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்கான எட்டு மண்டலங்களில் கோயம்புத்தூர் மற்றும் தஞ்சாவூர் மண்டலங்களில் உள்ள அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு மட்டும் பணி மேம்பாட்டிற்கான ஊதியம் வழங்கப்பட்டது. பின்னர் அதுவும் நிறுத்தப்பட்டுவிட்டது.




சென்னை, திருச்சி, வேலூர், தர்மபுரி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மண்டலங்களில் உள்ள அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களின் பணி மேம்பாட்டில் இணைப்பேராசிரியருக்கான (நிலை 12ல் இருந்து நிலை 13(A)) பணிமேம்பாட்டு ஆணை மட்டும் வழங்கப்பட்டுள்ள நிலையில், இன்று வரை அதற்குரிய நிலுவைத் தொகை மட்டுமல்ல, அடிப்படை ஊதியம் கூட வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இணைப்பேராசிரியருக்கான பணிமேம்பாடு மட்டுமின்றி, பணிமேம்பாட்டு நிலை10ல் இருந்து நிலை 11, நிலை 11ல் இருந்து நிலை 12 மற்றும் நிலை 12ல் இருந்து நிலை 13(A) ஆகிய எவ்வித பணி மேம்பாட்டு நிலைகளுக்கும் ஊதியம் வழங்கப்படாத நிலையே நீடிக்கிறது. அவ்வாறே MPhil, PhD க்கான ஊக்க ஊதியமும் வழங்கப்படாமல் உள்ளது. எனவே தொடரும் இந்த பாதிப்புகளைச் சரி செய்திட வேண்டுகிறோம்.

தமிழ்நாடு முழுவதும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் தவிர எவ்வித பணிமேம்பாடும் வழங்கப்படாததால், ஆசிரியர்கள் பெரும் பாதிப்பிற்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளனர். ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைகள் உள்ளிட்ட அனைத்து பணப் பலன்களும் அரசுக்கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒரே நேரத்தில் வழங்கப்பட்டு வந்தன. ஆனால் பணி மேம்பாட்டு அரசாணை அமல்படுத்துவதில் அரசுக்கல்லூரி ஆசிரியர்களுக்கும் அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் இடையே வேறுபாடு பார்க்கப்படுவதாகவே தோன்றுகிறது.

அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களின் சங்கங்களானஏ.யு.டி.மூட்டா ஆகியவை இணைந்தும் தனித்தனியாகவும்தொடர் போராட்டங்களை நடத்தி வருவதன் விளைவாக, சங்கப் பொறுப்பாளர்களை கடந்த 23.6.2025 அன்று உயர்க்கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் தலைமைச் செயலகத்தில் நேரில் அழைத்துப் பேசினார். அந்தச் சந்திப் பின்போது அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களின் நான்கு வருடகால கோரிக்கையான பணி மேம்பாடு (CAS) ஊதியம் மற்றும் நிலுவைத்தொகை உள்ளிட்ட அனைத்துக் கோரிக்கைகளும் பேசப்பட்டதன் தொடர்ச்சியாக, உயர்கல்வித்துறைஅமைச்சர், வருகின்ற ஜீலை மாத சம்பளத்தில் CAS பணப்பலன் சேர்க்கப்படும் என்ற வாய்மொழி உத்தரவாதத்தை அளித்திருந்தார்கள். ஆனால் தற்போது, இந்த மாத ஊதியத்தில் பணிமேம்பாட்டு ஊதியத்தை சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

எனவே அரசுக்கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருவது போலவே, அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் உரிமையான, நியாயமான, சட்டப்படியான, ஊதியம் மற்றும் அதற்கு உரிய நிலுவைத்தொகையைமேலும் கால தாமதமின்றி வழங்கிட தமிழ்நாடு அரசை வலியுறுத்தி, ஏயூடிமூட்டா இணைந்து பின்வரும் போராட்டங்களை அறிவித்துள்ளோம்.

அதன்படி 28.7.2025, திங்கள்கிழமை அன்று தமிழகம் முழுவதும் உள்ள 8 கல்லூரி கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களில் முழுநேர ஆர்ப்பாட்டம் மற்றும் 7.8.2025, வியாழக்கிழமை அன்று சென்னை கல்லூரி கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பெருந்திரள் முறையீடு நடைபெறும்.

தமிழ்நாடு முதல்அமைச்சரால் அறிவிக்கப்பட்டவைகள்அரசு ஆணைகளாக வேண்டும், ஆணைகள் எல்லாம் உடனே அமல்படுத்தப்பட வேண்டும் என்று உயர் அதிகாரிகளின்கூட்டத்தில் அறிவுறுத்தியதாக சமீபத்தில் ஊடகங்களின் வாயிலாக அறிகிறோம். ஆனால், அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகியும் அதன் பயன் அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு மட்டும் இன்னும் எட்டாக் கனியாகவே உள்ளது. எனவே, அரசு ஆணையை அமல்படுத்தக் கோரித் தொடர்ந்து போராடி வரும் அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை தமிழ்நாடு முதல்அமைச்சர் நிறைவேற்ற உடனே ஆவன செய்யுமாறு தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னை ஐகோர்ட்டு உத்தரவுப்படி அனைத்து செவிலியர்களுக்கும் காலமுறை ஊதியம்: செவிலியர்கள் சங்கம் அறிக்கை

கன்னியாகுமரி ஜூலை 22

தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் பொதுச் செயலாளர் சுபின் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

செவிலியர்களின் சம வேலைக்கு சம ஊதியம் என்ற சென்னை ஐகோர்ட்டு தீர்ப்புக்கு எதிராக தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருப்பது சமுக நீதிக்கு எதிரானதாகும்.

மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின் போட்டி தேர்வின் மூலம் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் கடந்த 2015ம் ஆண்டு தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளுக்கு செவிலியர்களை தேர்வு செய்தது. அரசு தேர்வு செய்த போது இரண்டு ஆண்டுகள் ரூ.7,700 மாத ஊதியத்தில் தொகுப்பூதிய முறையில் இரண்டு ஆண்டுகள் பணி செய்த பின் காலமுறை ஊதியத்திற்கு கொண்டு வரப்படுவார்கள் என்று பணி நியமன ஆணை வழங்கியது. ஆனால் தற்போது வரை குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே செவிலியர்கள் படிப்படியாக காலமுறை ஊதியத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.



கடந்த 2018ம் ஆண்டு சென்னை ஐகோர்ட்டின் தலைமை நீதிபதி அடங்கிய அமர்வு நிரந்தர செவிலியர்களின் பணிக்கு இணையான பணியை செய்யும் தொகுப்பூதிய செவிலியர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் 6 மாதத்திற்குள் ஊதியம் வழங்க உத்தரவிட்டது. அதனை நிறைவேற்றாத அரசுக்கு எதிராக கடந்த 2019ம் ஆண்டு சங்கம் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் துறை செயலாளர் தலைமையில் குழு அமைத்து செவிலியர்களின் பணி குறித்து ஆராய்ந்து ஊதியம் வழங்குவதாக தெரிவித்தது. ஆனால் அரசு அமைத்த குழு நீதிமன்றத்தில் இரண்டு முறை உண்மைக்கு புறம்பான தகவல்களை சமர்ப்பித்தது.

குழுவின் அறிக்கையில் உண்மை தன்மை இல்லாததால் நீதிமன்றம் இரண்டு ஓய்வு பெற்ற நீதிபதிகள் அடங்கிய குழுவை அமைத்து செவிலியர்களின்பணியின்தன்மையை ஆராய உத்தரவிட்டது. அந்த நீதிபதிகளின் அறிக்கையின் அடிப்படையில் மூன்று மாதத்தில் எம்.ஆர்.பி. தொகுப்பூதிய செவிலியர்களுக்கு நிரந்தர செவிலியர்களுக்கு இணையான ஊதியம் மற்றும் அனைத்து பணி பலன்களையும் வழங்க உத்தரவிட்டது.

ஐகோர்ட்டின் உத்தரவை அமல்படுத்தாத அரசு தற்போது அந்த உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு செய்துள்ளது. இது முழுக்க முழுக்க சமூக நீதிக்கு எதிரான செயலாகும்.

தேர்தல் வாக்குறுதியில் தொகுப்பூதிய செவிலியர்களை பணி நிரந்தரம் செய்வோம் என்று கூறிவிட்டு அதற்கு நேர்மறையாக செயல்படுவது ஏமாற்றமளிக்கிறது. முறையாக தேர்வு பெற்றும் 8 ஆண்டுகள் பணி நிரந்தரம் செய்யப்படாமல், தங்கள் இளமைகாலத்தைஇழந்து மகப்பேறு விடுப்பு உரிமைகளைகூட இழந்து நிற்கும் செவிலியர்களுக்கு, 8 ஆண்டு போராட்டத்திற்கு பின் கிடைத்த வெற்றியைப் பறிக்க முயற்சிக்கும் இந்த நடவடிக்கை சமூக நீதி ஆட்சி நடத்தும் இந்த அரசின் கொள்கைகளுக்கு எதிரானதாகும்.

தமிழ்நாடு அரசு உடனடியாக சென்னைஐகோர்ட்டு உத்தரவை நிறைவேற்றும் விதமாக அனைத்து செவிலியர்களுக்கும்காலமுறை ஊதியம்மற்றும்அனைத்து விதமான பலன்களையும் வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# கோவில்பட்டியில் வரதட்சணை கேட்டு திருமணத்தை நிறுத்திய வாலிபர்: பெற்றோர் மீது வழக்குப்பதிவு

தூத்துக்குடி ஜூலை 22

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தெற்கு பஜார் முடுக்குத் தெருவைச் சேர்ந்த தம்பதி ஆஷ்குமார் கஜலட்சுமி. இவர்களது மகன் பிரவீன்குமார் (வயது 25). இவரும் கோவில்பட்டி ராஜீவ் நகரைச் சேர்ந்த 25 வயதுப் பெண்ணும் பழகி வந்ததால், இருவரது பெற்றோரும் பேசி திருமணம் நடத்த முடிவு செய்துள்ளனர். இதனிடையே, துபையில் வேலை செய்துவந்த பிரவீன்குமார் ஊருக்குத் திரும்பவில்லை.

இந்தநிலையில், அந்தப் பெண் கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதில், கஜலட்சுமி கூடுதலாக தங்க நகை, ரொக்கம் கேட்பதாகவும், குறிப்பிட்ட தேதியில் திருமணத்தை நடத்தவிடாமல் தடுத்து ஏமாற்றுவதாகவும் தெரிவித்திருந்தார். இதுதொடர்பாக பிரவீன்குமார், அவரது பெற்றோர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்தனர்.

# கோவில் கட்ட பள்ளம் தோண்டியபோது அம்மன் சிலைகள் கண்டெடுப்பு

திருவாரூர், ஜூலை 22

திருவாரூர் மாவட்டம் நன்னிலம்தாலுகாவேலங்குடி ஊராட்சி வடகரை மாத்தூர் பகுதியில் காசி விஸ்வநாதர் கோவில் உள்ளது. இந்துசமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த கோவில் மிகவும் சிதிலமடைந்து காணப்ப ட்டது. இதையடுத்து அந்த பகுதி மக்கள் கோவிலை புதிதாக கட்ட முடிவு செய்தனர். அதனை தொடர்ந்து நேற்று பொக்லின் எந்திரம் மூலம் பள்ளம் தோண்டினர். அப்போது மண்ணுக்குள் இருந்து சத்தம் கேட்டுள்ளது.

இதனால் சந்தேகம் அடைந்த பொதுமக்கள், சத்தம் வந்த இடத்தில் தோண்டி பார்த்தனர். அப்போது உலோகத்தால் ஆன $1\frac{1}{2}$ அடி உயரமுள்ள அம்மன் சிலை ஒன்றும், 1 அடி உயரம் உள்ள அம்மன் சிலை மற்றும் பூஜை பொருட்களும் இருந்துள்ளது.



இதையடுத்து உடனடியாக அந்த பகுதி மக்கள் இதுகுறித்து கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் அங்கு வந்த நன்னிலம் தாசில்தார் ராமச்சந்திரன் மற்றும் அறநிலையத்துறை அலுவலர்கள், 2 அம்மன் சிலைகளையும், பூஜை பொருட்களையும் பார்வையிட்டனர். இதுகுறித்து தொல்லியல் துறைக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது தொல்லியல் துறையின் ஆய்வுக்கு பின்னரே சிலைகளும், பொருட்களும் எந்த காலத்தைசேர்ந்தவை?. அவை ஐம்பொன் சிலைகளா? என்பது தெரிய வரும். இதுகுறித்த தகவல் அறிந்ததும் மாத்தூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கூட்டம், கூட்டமாக வந்து அம்மன்சிலைகளை வணங்கி சென்று வருகின்றனர்.

# தேசிய மீன்பிடி டிஜிட்டல் தளத்தில் பதிவு செய்ய வேண்டும்: மீனவர்களுக்கு அழைப்பு

தூத்துக்குடி ஜூலை 22

தூத்துக்குடி மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை உதவி இயக்குநர் புஷ்ராஷப்னம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

"பிரதம மந்திரி மத்சய கிஸான் சம்திரி சஹ் யோஜனா (PMMKSSY) திட்டத்தின் கீழ் தேசிய மீன்வளத்துறை டிஜிட்டல் தளத்தில் (NFDP) மீனவர் மற்றும் மீனவ மகளிரை பதிவு செய்ய அறிவுறுத்தியும் இதுநாள் வரையிலும் தூத்துக்குடி மாவட்டத்தில் குறைவான அளவிலேயே பதிவு செய்துள்ளனர்.

மேலும் மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் கடல் மீனவர் நலத் திட்டங்கள், மீனவர் விபத்து காப்புறுதி திட்டம், மீனவர் நலவாரியம் போன்ற திட்டங்களின் கீழ் அனைத்து நபர்களும் விடுபாடின்றி பயன்பெறுவதற்கும் NFDP பதிவுகள் என்பது அவசியமானது ஆகும். அவ்வாறு NFOP Portalல் பதிவு செய்யாத மீனவர்களை, மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் பரிந்துரை செய்ய இயலாது, எனவே மீனவ கிராம மக்கள் அனைவரும் பயனடையும் விதத்தில் பொது இசேவை மையத்தின் மூலம் இப்பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருநெல்வேலி: கொலை முயற்சி வழக்கு குற்றவாளி குண்டர் சட்டத்தில் கைது

திருநெல்வேலி ஜூலை 22

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் பகுதியில் கொலை முயற்சி மற்றும் மிரட்டல் வழக்கில் ஈடுபட்ட இடிந்தகரையை சேர்ந்த சிலுவை அந்தோணி மகன் மரியலாரன்ஸ் (வயது 52) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவர் கொலை முயற்சி, அடிதடி மற்றும் மிரட்டல் போன்ற வழக்குகளில் ஈடுபட்டு பொதுமக்களை அச்சுறுத்தி வருவதாக கூடங்குளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரகுராஜன் கவனத்திற்கு வந்தது. இதனையடுத்து அவர், மரியலாரன்ஸ் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன்பேரில், மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின்பேரில் மரியலாரன்ஸ் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் இன்று அடைக்கப்பட்டார்.

# ராகுல் காந்தியின் பேச்சு முதிர்ச்சியின்மையை காட்டுகிறது: பெ.சண்முகம் விமர்சனம்

சென்னை, ஜூலை 22

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இல்லாமல் மதசார்பின்மையை பாதுகாக்க முடியுமா? என்று பெ.சண்முகம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கேரள மாநில முன்னாள் முதல் மந்திரியும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான உம்மன் சாண்டி முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டம் கோட்டயம் புதுப்பள்ளியில் நடைபெற்றது. இதில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கலந்து கொண்டு பேசினார். அப்பொது, ஆர்.எஸ்.எஸுக்கும், மார்க்சிஸ்ட் கட்சிக்கும் மக்களை பற்றிய புரிந்துணர்வு இல்லை.



அவர்களுக்குநிறைய கொள்கைகள் இருக்கலாம். அவர்களால் நிறைய பேச முடியும். ஆனால், அவர்களுக்கு மக்களுக்கள் மீது அன்பு இல்லை என்றுகூறினார்.

# அ.தி.மு.க. கூட்டணியில் இணைய இருக்கும் பிரமாண்ட கட்சி த.வெ.க.வா? முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு பேட்டி

தூத்துக்குடி, ஜூலை 22

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும், கோவில்பட்டி எம்.எல்.ஏ.வுமான கடம்பூர் ராஜூ செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடந்த 6ந் தேதி முதல் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்களை சந்தித்து வருகிறார். ஆளும் கட்சியான தி.மு.க. கூட்டணிக் கட்சிகளை நம்பி உள்ளது. ஆனால் எடப்பாடி பழனிசாமி மக்களை நம்பி உள்ளார். அவர் செல்கின்ற இடங்களில் மக்கள் கூடும் கூட்டமே ஆட்சி மாற்றத்திற் கான சாட்சியாக உள்ளது. அந்த வகையில் தூத்துக் குடி மாவட்டத்தில் வருகிற 31ந்தேதி விளாத்திகுளத்தி லும், 1ந் தேதி கோவில் பட்டியிலும் பிரசாரம் மேற்கொள்கிறார்.



ஓரணியில் தமிழ்நாடு என்ற பெயரில் அதிகாரிகளை வைத்து தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை நடத்தி வருகிறது. செய்தி தொடர்பாளர்கள் என்று 4 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை தமிழக அரசு நியமித்து ள்ளது. அரசியலுக்காக அரசு அதிகாரிகளை பயன்படுத்தும் போக்கினை கண்டித்து எடப்பாடி பழனிசாமி அறிக்கை வெளியிட்டுள்ளார். இதுவரை இதற்கு முதல்அமைச்சர் பதிலளிக்கவில்லை. இது எதை காட்டுகிறது என்றால் தி.மு.க.வின் பயத்தை காட்டுகிறது. தி.மு.க.விற்கு மக்களை சந்திக்க பயம். தி.மு.க. ஆட்சியை மக்கள் நிராகரிப்பார்கள். அ.தி.மு.க.விற்கு மாபெரும் வெற்றியை தருவார்கள். எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. தனித்து ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது, பிரமாண்டமான கட்சி அ.தி.மு.க. கூட்டணியில் இணைய இருப்பதாக எடப்பாடி பழனிசாமி கூறி இருப்பது தமிழகவெற்றிக்கழகத்தையா? என்ற செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு, இருக்கலாம், ஒத்த கருத்துடைய கட்சிகள் வரலாம் என்று ஏற்கனவே சொல்லி வருகிறோம் என கடம்பூர் ராஜூ பதில் அளித்தார்.

# வார விடுமுறையையொட்டி திற்பரப்பு அருவியில் குவிந்த சுற்றுலா பயணிகள்

கன்னியாகுமரி, ஜூலை 22

'குமரியின் குற்றாலம்' என்று அழைக்கப்படும் திற்பரப்பு அருவி, கன்னியாகுமரி மாவட்டத்தின் சிறப்பு வாய்ந்தசுற்றுலாதலங்களில் ஒன்றாக விளங்குகிறது.

இந்த அருவிக்கு பல்வேறு மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள்.

இந்த நிலையில், வார விடுமுறை தினத்தையொட்டி திற்பரப்பு அருவியில் இன்று ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.

பல்வேறு மாவட்டங்கள், மாநிலங்களில் இருந்து வந்திருந்த சுற்றுலா பயணிகள், நீண்ட வரிசைகளில் காத்திருந்து அருவியில் ஆர்ப்பரித்துக் கொட்டும் தண்ணீரில் உற்சாகமாக குளித்தனர்.

அங்குள்ள நீச்சல் குளத்தில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரைஅனைவரும் குளித்தும், விளையாடியும் மகிழ்ந்தனர்.

# காதலியுடன் இருந்த கணவரை கையும் களவுமாக பிடித்த மனைவி; வீட்டை பூட்டி வாக்குவாதம் செய்ததால் பரபரப்பு



கடலூர், ஜூலை 22

கடலூர் மாவட்டம் பண்ருட்டி பகுதியை சேர்ந்த லோகனாதன் என்பவருக்கும், கலைச்செல்வி என்ற பட்டதாரி பெண்ணுக்கும் கடந்த 2016ம் ஆண்டு பெற்றோர் சம்மதத்துடன் காதல் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது வரதட்சணையாக 43 சவரன் தங்க நகை, ரூ.2 லட்சம் ரொக்கம் உள்ளிட்டவை கொடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனிடையே, லோகனாதனும் கலைச்செல்வியும் கருத்து வேறுபாடு காரணமாக கடந்த சில வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். மேலும் லோகனாதன் தன்னிடம் வரதட்சணை கேட்டு தன்னை கொடுமைப்படுத்தியதாக பண்ருட்டி மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகார் தற்போது வரை நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், தன்னை விவாகரத்து செய்யாமலேயே லோகனாதன் வேறொரு பெண்ணுடன் பண்ருட்டி பகுதியில் வசித்து வருவதாக கலைச்செல்விக்கு தகவல் தெரிய வந்தது. இதன்படி புதுப்பேட்டை பகுதியில் உள்ள வீட்டில் லோகனாதன் இருப்பதாக கலைச்செல்விக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அந்த வீட்டிற்கு சென்றகலைச்செல்வி அங்கு, லோகனாதன் தனது காதலியுடன் இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

பின்னர் லோகனாதனையும், அவருடன் இருந்த பெண்ணையும் சேர்த்து வீட்டிற்குள் வைத்து பூட்டியகலைச்செல்வி, தன்னை விவாகரத்து செய்யாமல் வேறொரு பெண்ணுடன் எப்படி குடும்பம் நடத்தலாம்? என்று கேட்டு கூச்சலிட்டார். பதிலுக்கு வீட்டிற்குள் இருந்த பெண் கலைச்செல்வியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதைக் கேட்டு அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் அங்கு கூடினர். இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், கலைச்செல்வியை சமாதானம் செய்து அங்கிருந்து அனுப்பி வைத்தனர்.

மேலும் இது குறித்து எழுத்துப்பூர்வமாக புகார் அளித்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவத்தால் அந்தபகுதியில்சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
22.7.2025

# கடைசி வாய்ப்பு... வன்னியர்களுக்கு இடஒதுக்கீட்டை உடனே வழங்குக அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 22

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு ஆணையிட்டு 1,208 நாள்களாகியும், அதை செயல்படுத்தத் தவறிய திமுக அரசைக் கண்டித்தும், வன்னியர்களுக்கு உடனடியாக உள் இட ஒதுக்கீடு வழங்கவலியுறுத்தியும் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் விழுப்புரத்தில் நடைபெற்ற மாபெரும் மக்கள்திரள் போராட்டம் வரலாறு காணாத வெற்றியை பெற்றிருக்கிறது.

இதை சாத்தியமாக்கிய பாட்டாளி சொந்தங்களுக்கு எனது நன்றிகளை உரித்தாக்குகிறேன். வன்னியர்களின் அடிப்படை உரிமையான இட ஒதுக்கீடை வழங்க மறுக்கும் திமுக அரசின் சமூக அநீதியை அம்பலப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் தான் விழுப்புரம் மக்கள்திரள் போராட்டத்திற்கு திரண்டு வரும்படி அழைப்பு விடுத்திருந்தேன்.

நேற்றைய போராட்டத்தில் தனிநபர்களாக பங்கேற்ற பாட்டாளிகளை விட, குடும்பத்துடன் கலந்து கொண்ட பாட்டாளிகள் தான் அதிகம். அதிலும் குறிப்பாக பெருமளவிலான பாட்டாளிகள் தங்களின் கைக்குழந்தைகள், சிறுவர்கள், சிறுமிகளுடன் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். இதன் மூலம் வன்னியர் இட ஒதுக்கீட்டு சிக்கலில் தங்களின் வலிகள், வேதனைகள், உணர்வுகள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றையும், அவற்றைக் கடந்து தங்களின் எச்சரிக்கையையும் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புரிந்து கொள்ள வேண்டும்; அதற்கேற்றவாறு செயல்பட வேண்டும். உங்களுக்கு மனசாட்சி என்ற ஒன்று இருந்தால், வன்னியர் இட ஒதுக்கீட்டு விவகாரத்தில் நீங்கள் செய்தவை நியாயமானவையா? சமூகநீதி இலக்கணத்துடன் இயைந்ததவையா? என்பதை எண்ணிப்பாருங்கள் டாக்டர் ராமதாசால் 20.07.1980ம் நாள் வன்னியர் சங்கம் தொடங்கப்பட்டது முதல் கடந்த 45 ஆண்டுகளுக்கும் மேலாக தங்களின் சமூகநீதிக்காக வன்னிய மக்கள் போராடி வருகின்றனர். இனியும் தாங்கள் ஏமாற்றப்படுவதை தாங்கிக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை; இட ஒதுக்கீட்டுக்காக காத்திருக்கவும் அவர்கள் விரும்பவில்லை. சமூக நீதி அவர்களின் உரிமை.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே, வன்னியர்களின் சமூகநீதியை மறுத்து உங்கள் தலைமையிலான ஆட்சிக்கு நீங்களே முடிவுரை எழுதி விடாதீர்கள். உங்களுக்கு இப்போது கிடைத்திருப்பது தான் கடைசி வாய்ப்பு. இந்த வாய்ப்பை பயன்படுத்தி, வன்னியர்களின் வலிகள், வேதனைகள், உணர்வுகள் ஆகியவற்றை மதித்து, அவர்களின் உரிமையான உள் இட ஒதுக்கீட்டு சட்டத்தை உடனடியாக நிறைவேற்றுங்கள் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தூத்துக்குடியில் வாலிபர் தூக்குப்போட்டு தற்கொலை

தூத்துக்குடி ஜூலை 22

தூத்துக்குடி, முத்தையாபுரம், அத்திமரப்பட்டி சண்முகபுரம் கீழத் தெருவைச் சேர்ந்த முருகன் மகன் பிரசாத் (வயது 29) சென்ட்ரிங் வேலை பார்த்து வந்தார். இவருக்கு திருமணம் ஆகவில்லை. இவர் கடந்த 17ம்தேதி காலையில் இருந்து யாரிடமும் பேசாமல் தனிமையில் இருந்துள்ளார். அன்று இரவு சாப்பிட்டுவிட்டு மாடியில் உள்ள அறைக்கு தூங்குவதற்கு சென்றுள்ளார்.

இதனை தொடர்ந்து இரவு, அவரது அண்ணன் மனோஜ்குமார் மாடிக்கு சென்று பார்த்தபோது, பிரசாத் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது.

இதுகுறித்த தகவலின் பேரில் முத்தையாபுரம் காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று, உடலை மீட்டு பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரசுப் பேருந்தில் ஏசி வேலை செய்யவில்லை என வழக்கு: அதிகாரிகள், பயணிக்கு ரூ.35,000 வழங்க உத்தரவு

திருநெல்வேலி ஜூலை 22

ராஜேஷ் என்பவர் கடந்தாண்டு ஏப்ரல் 1ம் தேதி மதுரையில் இருந்து நெல்லைக்கு ரூ.190 கட்டணமாக கொடுத்து அரசு ஏசி பேருந்தில் சென்றுள்ளார். அப்போது பேருந்தில் ஏசி வேலை செய்யாமல் இருந்ததால் பயணிகள் பலரும் அவதியடைந்துள்ளனர். போக்குவரத்துக் கழக அதிகாரியிடம் புகார் அளித்த போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ராஜேஷ் நெல்லை மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். இதனையடுத்து அவருக்கு நஷ்ட ஈடாக ரூ.25,000, வழக்குச் செலவு ரூ.10,000 என மொத்தம் ரூ.35,000ஐ ஒரு மாதத்திற்குள், நெல்லை மண்டல போக்குவரத்துக் கழக பொது மேலாளர் மற்றும் நிர்வாக இயக்குனர் ஆகியோர் தங்களது சொந்தப் பணத்தினை கொடுக்க வேண்டும் என நெல்லை மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தேசிய ஜனநாயக கூட்டணி பலமுடன் உள்ளது தமிழிசை சவுந்தரராஜன்



சென்னை, ஜூலை 22

சென்னை நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பாஜக முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கலந்துகொண்டார். நடைபெற்றது. இதன்பின் செய்தியாளர்களை சந்தித்த அவர் பேசியதாவது;

"அமித்ஷாவும், எடப்பாடி பழனிசாமியும் அமர்ந்து எத்தனை இடங்கள், அணியை முன்னெடுத்துச் செல்வது எப்படி என்பதையெல்லாம் முடிவு செய்வார்கள். தலைவர்களின் பேச்சுக்கு விளக்கம் கொடுப்பதற்கு நாங்கள் இல்லை. தேசிய ஜனநாயகக் கூட்டணி பலம் பொருந்திய கூட்டணியாக இருக்கிறது. நிச்சயமாக அது பலமடையும். நிச்சயமாக அது வெற்றி பெறும்."

இவ்வாறு அவர் கூறினார்.

# இன்றைய ராசி பலன்கள் (22.7.2025)

**மேஷம்:** திட்டமிட்டபணிகள்வெற்றிகரமாக நிறைவேறும். வீண் செலவுகள் குறையும். பரிகாரம்: செவ்வாயிற்கு அர்ச்சனை செய்யவும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை. வருமானத்தில் உயர்வு ஏற்படும். பரிகாரம்: தாயாரை தரிசனம் செய்யுங்கள்.

**மிதுனம்:** புதிய பொறுப்புகள் கிடைக்கும். சில்லறை சண்டைகளை தவிர்க்க வேண்டும். பரிகாரம்: விநாயகர் பூஜை செய்யுங்கள்.

**கடகம்:** மனதில்இருந்தகவலைகள்நீங்கும். உறவினர்கள் ஆதரவு அதி கரிக்கும். பரிகாரம்: தண்ணீர் புனித மாக பரிசுத்த இடத்தில் ஊற்றுங்கள்.

**சிம்மம்:** தொழிலில் புதிய வாய்ப்புகள். சிறு இடையூறுகள் வந்தாலும் நீங்கும். பரிகாரம்: சூரியனுக்கு ஜபம் செய்யவும்.

**கன்னி:** பயணங்கள் சாதகமாக அமையும். வழக்கு சம்பந்தமான விஷயங்களில் முன்னேற்றம். பரிகாரம்: நவகிரஹ பூஜை செய்து வாருங்கள்.

**துலாம்:** பழைய கடன்கள் திரும்ப கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதி ஏற்படும். பரிகாரம்: சந்திரனுக்கு பால் அபிஷேகம் செய்யவும்.

**விருச்சிகம்:** வியாபாரத்தில் லாபம். உற்சாகமான நாள். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். பரிகாரம்: சனிபகவானை வணங்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகள் வெற்றி பெறும். பண வரவு இருக்கும். பரிகாரம்: துர்கை அம்மனை வழிபடுங்கள்.

**மகரம்:** வீட்டில் நற்செய்தி. மனச்சாந்தி ஏற்படும். கொடுத்த உதவிக்கு மதிப்பு கிடைக்கும். பரிகாரம்: நந்திதேவனை வழிபடுங்கள்.

**கும்பம்:** தொழில் வளர்ச்சி, ஆனந்த நாள். நண்பர்களின் துணை கிடைக்கும். பரிகாரம்: துளசி அருகே விளக்கு ஏற்றுங்கள்.

**மீனம்:** கடின உழைப்பால் வெற்றி. ஆரோக்கியம் மேம்படும். பரிகாரம்: குருவுக்கு பூஜை செய்யவும்.

# ஜே.எம்.ஜே மீடியா pvt(Ltd)ஏற்பாட்டில் வெற்றிகரமாக இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்



"ஜே.எம்.ஜே. மீடியா (PVT LTD) ஏற்பாட்டில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் நிகழ்ச்சி வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

ஒருகொடியவைரஸ் நோயான டெங்கு ஏடிஸ் வகை நுளம்புகளினால் பரப்பப்படுகின்றது. இந் நுளம்புகள் தண்ணீர் தேங்கி நிற்கின்ற இடங்களான பழைய குடிநீர் தொட்டிகள், பிளாஸ்டிக் குடங்கள் மற்றும் பழைய டயர்கள் போன்றவற்றில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கின்றன.

அந்த வகையில் மனித உயிர்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்தும் இந்நுளம்புகள் பெருகும் இடங்களை அழிக்கும் செயற்திட்டம் ஜே.எம்.ஜே. மீடியா (PVT LTD) நிறுவனத்தின் பணிப்பாளர் ஜஸூரா ஜலீலின் வழிகாட்டுதலிலும், உலகளாவிய ஒருங்கிணைப்பாளர்களின் ஏற்பாட்டிலும் உலகின் பல இடங்களிலும் இடம்பெற்றிருந்தது.

அத்துடன் இந்நிகழ்வின் டெங்கு நுளம்புகளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டதுடன், இதிலிருந்து மக்கள் எவ்வாறு தம்மை பாதுகாத்துக் கொள்வது தொடர்பிலும் விளக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் டெங்கு ஒழிப்பு தனி ஒரு நபர் அல்லது அரசாங்கத்தினால் மட்டும் செய்து முடிக்கக் கூடிய செயற்திட்டம் அல்ல எனவும் இது அனைத்து குடிமக்களின் பொதுப் பொறுப்பாகும் எனவும், நாம் அனைவரும் விழிப்புடன் ஒன்றுபட்டு செயற்பட்டால் டெங்கு எனப்படும் இக்கொடிய நோயினை ஒழிக்க முடியும் எனவும் கருத்துக்கள் மக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாணவர்கள், பொது மக்கள் மற்றும் பல துறைகளை சேர்ந்த நபர்கள், சமூக நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டமை சுட்டிக்கா ட்டத்தக்கது.

# கணவரை பிரிகிறாரா ஹன்சிகா? திருமணம் ஆகி இரண்டே ஆண்டில் ஏற்பட்ட மனகசப்பு



'சின்ன குஷ்பு', 'அமுல்பேபி' என்றெல்லாம் வர்ணிக்கப்பட்ட ஹன்சிகா மோத்வானி, தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையாக ஜொலித்தார். குழந்தைநட்சத்திரமாகபாலிவுட்சினிமாவில்அறிமுகமான ஹன்சிகா மோத்வானி, தமிழில் தனுஷ் நடித்த மாப்பிள்ளை படத்தின் மூலம் ஹீரோயினாக அறிமுகமானார். அந்த திரைப்படத்தை தொடர்ந்து தமிழில்ஒருகல்ஒருகண்ணடி, எங்கேயும்காதல், தீய வேலை செய்யனும் குமாரு, சேட்டை, வேலாயுதம், வாலு என அடுத்தடுத்து படங்களில் நடித்து வந்தார். தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிப்படத்திலும் பிஸியாக நடித்து வந்த ஹன்சிகா மோத்வானி,

கடந்த 2022ம் ஆண்டு சோஹைல் கட்டாரியா என்பவரை ஹன்சிகா காதல்திருமணம்செய்துகொண்டார். இவர்களதுதிருமணம்ஜெய்ப்பூரில் கோலாகலமாக நடந்தது.

ஹன்சிகாசோஹைல் கட்டாரியா தம்பதியரிடம் இருந்து நல்ல செய்தி வரும் என்று காத்திருந்த ரசிகர்களுக்கு தற்போது அதிர்ச்சிதான் வந்து சேர்ந்திருக்கிறது.

அதாவது, ஹன்சிகா தனது கணவரை பிரிந்து விட்டாராம். கடந்த மாதமே அவர், கணவர் வீட்டில் இருந்து இருந்து வெளியேறி, தற்போது மும்பையில் தனது அம்மாவுடன் வசித்து வருகிறாராம். இருவருக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு தான் இதற்கு காரணம் என்று சொல்லப்படுகிறது.

இதனால் என்ன ஆனது? என்று சமூக வலைதளங்களில் ரசிகர்கள் கொந்தளித்து வருகிறார்கள். ஹன்சிகா இதற்கு விளக்கம் அளிக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.

சோஹைல் கட்டாரியாவின் முன்னாள் மனைவி ரிங்கி பஜாஜ், ஹன்சிகாவின் நெருங்கிய தோழி என்பது குறிப்பிடத்தக்கது.

திருமணத்திற்குப் பின் ஹன்சிகாவும், சோஹேலும் கூட்டு குடும்பமாக இருக்க முடிவு செய்து உள்ளனர். ஆனால், ஹன்சிகாவிற்கு தனது கணவரின் குடும்பச் சூழலுக்கு ஏற்படி இருக்க முடியாமல் சிரமப்பட்டுள்ளார். இதனால், இருவருக்குள்ளும் சின்ன சின்ன சண்டை அவ்வப்போது ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதை புரிந்து கொண்ட சோஹேலின் பெற்றோர். அதே வீட்டில் மேல் மாடி அறைக்கு சென்றுள்ளனர். இருந்த போதும், ஹன்சிகாவிற்கும் சோஹேலுக்கும் இடையே ஏற்பட்ட மன கசப்பு மாறாததால் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதாக சமூக வலைதளங்களில் செய்திகள் வெளியாகி உள்ளது.

# 4 வாரங்களை கடந்து வெற்றிநடைபோடும் எப்1 திரைப்படம்

பிராட் பிட் நடித்த "எப்1 " திரைப்படம் உலகளவில் 3626 கோடிக்கும் மேல் வசூலித்துள்ளது




டாப் கன் மேவ்ரிக் படத்தை இயக்கிய ஜோசப் கொசின்ஸ்கி அடுத்ததாக பிராட் பிட் நடிப்பில் 'எப்1' படத்தை இயக்கினார். இப்படம் சமீபத்தில் வெளியாகி மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்று வருகிறது. திரைப்படம் வசூலில் பட்டையை கிளப்பி வருகிறது.

உலகம் முழுவது உள்ள ரசிகர்கள் படத்தை கொண்டாடி வருகின்றனர். இந்தியாவில் மட்டும் இதுவரை ரூ 76.5 கோடி வசூலித்தது குறிப்பிடத்தக்கது. உலகளவில் ரூ 3626 கோடிக்கும் மேல் வசூலித்துள்ளது. இந்தாண்டு வெளியாகி அதிக வசூல் பெற்ற திரைப்படங்களில் 'எப்1' முக்கிய இடத்தில் உள்ளது.

காசுக்காக பல ரேஸ்களில் ஈடுப்பட்டு வரும் ப்ராட் பிட் தன் நண்பனின் டிம்ம் 'எப்1' ரேஸில் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக அங்கு ரேஸ் ஓட்ட வருகிறார். அங்கு ஏற்கனவே இளம் ரேஸரான ஜோஷ்வா இருக்கிறார். அவர்களுக்கு இடையே முரண் ஏற்படுகிறது. இதைத்தாண்டி எப்படி அவர்கள் ரேசில் வென்றார்கள் என்பதே படத்தின் கதையாகும்.

# கேமரூன் கிரீன், ஓவன் அரைசதம்; வெஸ்ட் இண்டீஸை வீழ்த்திய ஆஸ்திரேலியா



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீஸில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டி20 போட்டி நேற்று (இந்திய நேரப்படி இன்று) நடைபெற்றது.

இதில் முதலில் பேட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் 20 ஓவரில் 8 விக்கெட்டை 189 ரன் எடுத்தது. வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அதிகபட்சமாக ரோஸ்டன் சேஸ் 60 ரன் எடுத்தார். ஆஸ்திரேலியாதரப்பில்துவார்ஷியஸ்4விக்கெட் வீழ்த்தினார்.

தொடர்ந்து 190 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஆஸ்திரேலியா 18.5 ஓவரில் 7 விக்கெட்டை இழ்ந்து 190 எடுத்து 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆஸ்திரேலியா தரப்பில் கேமருன் கிரீன் (51 ரன்), மிட்செல் ஓவன் (50 ரன்) அரைசதம் அடித்து அசத்தினர். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டி220 தொடரில் 10 என ஆஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது.

# மகளிர் டி20 கிரிக்கெட்; ஜிம்பாப்வேயை வீழ்த்திய அயர்லாந்து




ஜிம்பாப்வே மகளிர் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 2 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் டி20 போட்டிகள் நடைபெறுகின்றன. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டி20 போட்டி டப்ளினில் நேற்று நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த ஜிம்பாப்வே அணி 20 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 117 ரன்கள் மட்டுமே எடுத்தது. ஜிம்பாப்வே தரப்பில் சிப்போ முகேரி 42 ரன் எடுத்தார். அயர்லாந்து தரப்பில் காரா முர்ரே 3 விக்கெட் வீழ்த்தினார்.

தொடர்ந்து 118 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த அயர்லாந்து 16.5 ஓவரில் 4 விக்கெட்டை மட்டும் இழந்து 118 ரன் எடுத்து வெற்றி பெற்றது. அயர்லாந்து தரப்பில் கேபி லூயிஸ் 67 ரன் எடுத்தார்.

# நாங்கள் சிறப்பாக பேட்டிங் செய்யவில்லை கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் பேட்டி

ஹர்மன்பிரீத் கவுர்தலைமையிலான இந்திய மகளிர்கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இங்கிலாந்துக்கு எதிரான டி20 தொடரை முதல்முறையாக வென்ற இந்திய அணி அடுத்து 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றுள்ளது.

இதில் சவுத்தம்டனில் நடந்த முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி லண்டன் லார்ட்சில் நடைபெற்றது.

இந்த போட்டியில் இந்தியாவை வீழ்த்தி இங்கிலாந்து வெற்றி பெற்றது. இதன் காரணமாக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 11 என சமனில் உள்ளது. இந்நிலையில், 2வது போட்டியில் தோல்வி கண்ட பின்னர் இந்திய கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

நாங்கள் இன்று சிறப்பாக பேட்டிங் செய்யவில்லை. அது எங்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தியது. அவர்கள் எங்களது திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த எந்தவொரு வாய்ப்பும் அளிக்கவில்லை. எல்லா பாராட்டும் இங்கிலாந்து அணியினரையே சாரும். மேகமூட்டமான சூழ்நிலையால் பேட்டிங் செய்வது எளிதானதாக இருக்கவில்லை. இருப்பினும் நாங்கள் போராடி கவுரவமான ஸ்கோரை எடுத்தோம். எங்களால் தொடக்கத்தில் விக்கெட் வீழ்த்தி அவர்களுக்கு நெருக்கடி அளிக்க முடியவில்லை. இதில் இருந்து நிறைய கற்றுக்கொண்டோம். இன்று ஒரு வித்தியாமான நாளாக அமைந்தது. இதனை தவிர மற்றபடி நாங்கள் நன்றாக விளையாடினோம். நாங்கள் அதனை அடுத்த போட்டிக்கு செல்லுகையில் நினைவில் வைத்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.